2012 மே 16]

240—

பேருந்து வசதி

வினா எண் 4327—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நெல்லை சந்திப்பிலிருந்து மேறுடியூர், மேசடையான்குளம், தேவநல்லூர் வழியாக களக்காட்டிற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) களக்காட்டிலிருந்து தேவநல்லூர், மேசடையான்குளம் வழியாக திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் வரை நேரடிப் பேருந்து வசதிகள் ஏற்கெனவே உள்ளன. எனவே, புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

241—

கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 4328—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டிலிருந்து கள்ளிகுளம், தட்சிணமாறா நாடார் சங்க கல்லூரி வரை கல்லூரி நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குட்செனமாறா நாடார் சங்க கல்லூரிக்கு காலையில் ஒரு நடையும், மாலையில் கல்லூரியிலிருந்து ஊக்காட்டிற்கு ஒரு நடையும் புறநகர் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்படி கல்லூரிக்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானவையாகும்.

242—

கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 4330—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியிலிருந்து மூலைக்கரைப்பட்டிக்கு பள்ளி நேரத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரியிலிருந்து மூலைக்கரைப்பட்டி சென்று வர தற்போது நாளொன்றுக்கு 31-க்கும் மேற்பட்ட நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கூடுதல் நடை இயக்கப்பட வேண்டியதில்லை.

243—

பேருந்து வசதி

வினா எண் 4333—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலிருந்து கும்பகோணத்திற்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து கும்பகோணத்திற்கு நேரடி பயணிகள் உபயோகம் குறைவாக இருக்கும் என்பதால், தனிப்பேருந்து இயக்கும் அளவிற்கு போக்குவரத்து தேவை எழவில்லை.

244—

பேருந்து வசதி

வினா எண் 4334—திரு. ஏ.கே. பாபு முருகவேல்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலிருந்து திருச்சிக்கு புதிய வழித்தடத்திலும் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து திருச்சிக்கு நேரடி பயணிகள் உபயோகம் குறைவாக இருக்கும் என்பதால், தனிப்பேருந்து இயக்கும் அளவிற்கு போக்குவரத்துத் தேவை எழவில்லை.